## FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102185

1. District மாவட்டம் : விருதுநகர் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 05/2023 Date: நாள் 25.06.2023

2. (i) Act சட்டம்: Prevention of corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act - 1988 as amended Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: in 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 21.06.23 12.00 hrs Date to : நாள் வரை 24.06.23 10.30 hrs.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.06.2023 Time : நேரம் 16.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் கீழராஜகுலராமன் ஊராட்சி மன்ற அலுவலகம், சுமார் 55 கி.மீ வடமேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.பொன்.மாயபாண்டியன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.பொன்னுச்சாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1966 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி கதவு எண்.81, நடுத்தெரு, கீழராஜகுலராமன், வெம்பக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. காளிமுத்து, ஊராட்சி மன்ற தலைவர், கீழராஜகுலராமன் ஊராட்சி, திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
[illegible] தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது.</u>

நான் இன்று 25.06.2023 மாலை 16.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை தாலுகா, கீழராஜகுலராமன், நடுத்தெரு, கதவு எண்.81 என்ற முகவரியைச் சேர்ந்த திரு.பொன்னுச்சாமி என்பவரின் மகன் திரு.பொன்.பாபா பாண்டியன் என்பவர் என் முன்பாக ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அந்த புகார் மனு தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 25.06.2023 மாலை 18.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.காளிமுத்து, ஊராட்சி மன்ற தலைவர், கீழராஜகுலராமன் ஊராட்சி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 05/2023 பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தம் 2018)-இன்படி வழக்கு பதிவு செய்தேன்.

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 25/6/23 | [signature] 25/6/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25.06.2023 at 19.00 hrs.

Name: பெயர் C.Salvan Thurai
Rank: நிலை Inspector of Police No. எண் ..........
VAC
Virudhunagar.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

<u>விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.05/2023 பிரிவு 7 of Prevention of Corruption (Amendment) Act-2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி</u>

மேற்படி புகார் மனு விபரம் பின்வருமாறு அனுப்புநர் பொன்.பாபா பாண்டியன், த/பெ.இ.பொன்னுச்சாமி, கதவு எண். 81, நடுத்தெரு, கீழராஜகுலராமன், வெம்பக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். ஐயா, நான் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை தாலுகா, கீழராஜகுலராமன், கதவு எண். 81 நடுத்தெரு என்ற முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். கடந்த 2001ஆம் ஆண்டு கீழராஜகுலராமன் கிராமத்தில் குடியிருக்கின்ற சீர்மரபினர் இந்து-மறவர் சமூகத்தைச் சேர்ந்த எனது மனைவி திருமதி.ரூபாராணி உட்பட உள்ள 40 நபர்களுக்கு (இராஜபாளையம் வட்டம்) தற்போது வெம்பக்கோட்டை வட்டம், கீழராஜகுலராமன் கிராமம் புல எண்.1667/4 பகுதி 1667/5 0.81.0 ஹெக்டெர் நிலத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர், ஆதிதிராவிடர் நல வட்டாட்சியர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் அ1/210/2001, நாள். 19.09.2001-ன்படி தலா 3 செண்ட் வீதம் வீட்டுமனைப் பட்டா வழங்கி உத்தரவிடப்பட்டது. அந்த எனது மனைவி திருமதி.ரூபாராணி பெயரில் இலவசமாக வழங்கப்பட்ட வீட்டுமனையிடத்தில் சொந்தமாக வீடு கட்டும் நோக்கத்துடன் ரூ 15,00,000/- மதிப்பில் வீடு கட்ட மதிப்பீடு, கட்டிட வரைபடங்கள் தயார் செய்து, அத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்களின் நகல்களை இணைத்து கட்டிட வரைபட அனுமதி வேண்டி கீழராஜகுலராமன் ஊராட்சிமன்ற தலைவருக்கு எனது பெயரில் மனு ஒன்றை 19.06.2023ஆம் தேதியிட்டு தயார் செய்து, அந்த மனுவை கடந்த 21.06.2023ஆம் தேதி மதியம் சுமார் 12 மணிக்கு கீழராஜகுலராமன் ஊராட்சிமன்ற அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த ஊராட்சி மன்ற தலைவர் திரு.காளிமுத்து அவர்களை நேரில் சந்தித்து கொடுத்தேன். அவர் அந்த மனுவை வாங்கி வைத்துக்கொண்டு பார்வையிட்டு விட்டு, தொழிலாளர் நல வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.15,000/-, ஊராட்சி மன்றத்திற்கு கட்ட வேண்டி செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.3,000/-, தனக்கு தனியாக செலவுக்கு ரூ.10,000/- ஆக மொத்தம் ரூ.28,000/- ரெடி பண்ணி கொண்டு வந்து தர வேண்டுமென்றும், அந்த ரூ.28,000/-த்தை மொத்தமாகக் கொண்டுவந்து கொடுத்தால்தான் கட்டிட வரைபட அனுமதி உத்தரவை தருவேன் என்று திட்டவட்டமாக கூறினார். ஆகையால் நான், ஊராட்சி மன்ற தலைவர் திரு.காளிமுத்து அவர்கள், தொழிலாளர் நல வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.15,000/- மற்றும் ஊராட்சிமன்றத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.3,000/- என்று கேட்டு மொத்தப் பணம் ரூ.18,000/-த்தை மட்டும் ரெடிபண்ணி கொண்டு, கடந்த 23.06.2023ஆம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் கீழராஜகுலராமன்

ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த ஊராட்சிமன்ற தலைவர் திரு.காளிமுத்து அவர்களை சந்தித்து, எனது மனைவி பெயரில் வழங்க வேண்டிய கட்டிட அனுமதி சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர் என்னிடம், நான் தொழிலாளர் நல வாரியத்திற்கு கட்ட வேண்டிய கட்டணம் ரூ.15,000/-, ஊராட்சிமன்றத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.3,000/-, தனக்கு தனியாக செலவுக்கு ரூ.10,000/- என்று கேட்ட மொத்த பணம் ரூ.28,000/- கொண்டுவந்திருக்கீங்களா என்று கேட்டார். அதற்கு நான், அவரிடம் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மொத்த பணம் ரூ.18,000/-த்தை மட்டும் மிகவும் கஷ்டபட்டு ரெடிபண்ணி கொண்டு வந்திருக்கிறேன், இந்த பணத்திலேயே கட்டிட வரைபட அனுமதி உத்தரவை ரெடி பண்ணி கொடுங்க என்று சொல்லி, அந்த பணம் ரூ.18,000/-ஐ மட்டும் கொடுத்தேன். அவர் அந்த பணம் ரூ.18,000/-ஐ பெற்றுக்கொண்டு, அவர் அவருக்கு கேட்ட பணம் ரூ.10,000/-ஐ ரெடிபண்ணி கொண்டு மறுநாள் வரச்சொன்னார். பின்னர் மறுநாள் (24.06.2023) அவர் கேட்ட ரூ.10,000/-ஐ ரெடிபண்ணாமல், காலை சுமார் 11.00 மணிக்கு ஊராட்சிமன்ற அலுவலகத்திற்கு சென்று, ஊராட்சிமன்ற தலைவர் திரு.காளிமுத்து அவர்களை சந்தித்து, எனது மனைவி பெயரில் வழங்க வேண்டிய கட்டிட வரைபட அனுமதி சம்மந்தமாக கேட்டேன். அப்போதும் அவர் எங்கங்க நான் கேட்ட பணம் ரூ.10,000/- கொண்டு வந்திருக்கீங்களா என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் அந்த பணத்தை ரெடி பண்ண முடியல, ரொம்ப கஷ்டமா இருக்குங்க, நீங்க பார்த்து செய்யுங்க என்று கூறி, கட்டிட வரைபட அனுமதியையும், ஏற்கனவே நான் கொடுத்த பணம் ரூ.18,000/-க்குரிய இரசீதையும் கொடுங்கள் என்று கேட்டேன். ஆகையால் அவர் நான் கொடுத்த பணம் ரூ.18,000/-ல் ரூ.17,910/-க்கு 23.06.2023 தயார் செய்து வைத்திருந்த இரசீது மற்றும் கட்டிட அனுமதி உத்தரவு ஆகியவற்றையும், மீதிப்பணம் ரூ.90/-யும் கொடுத்தார். அப்போது நான் அவரிடம் இரசீதும், கட்டிட அனுமதி உத்தரவும் மட்டும் கொடுக்கிறீங்க, அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடத்தை கொடுக்கல என்று கேட்டேன். அதற்கு அவர் நான் எனக்கு தனியா செலவுக்கு கேட்ட ரூ.10,000/-த்தை கொண்டு வந்து என்னிடம் கொடுத்துட்டு, அந்த அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடத்தை வாங்கிங்க என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் அரசுக்கு கட்ட வேண்டிய ரூ.18,000/-ஐ பணத்தையே ரொம்ப கஷ்டப்பட்டு ரெடி பண்ணி கொண்டுவந்தேன், நீங்க கேட்கிற ரூ.10,000/- பணத்தை எப்படிங்க ரெடிபண்றது?, ரொம்ப கஷ்டமா இருக்குங்க, நீங்க பார்து செய்யுங்க என்று சொன்னேன். அதற்கு அவர் ஏங்க நிறைய செலவு பண்ணிதான் ஊராட்சிமன்ற தலைவரா வந்திருக்கேன், அதனால உங்களுக்கு நான் சும்மா அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடத்தை தரமுடியாது என்று சொல்லி, நீங்க வேணா ரூ.6,000/-ஐ ரெடிபண்ணி கொண்டு வந்து என்னிடம் கொடுங்கள், அந்த ரூ.6,000/- பணத்தை கண்டிப்பா கொண்டு

வந்து என்னிடம் கொடுத்தால் தான், உங்க மனைவி பெயரில் அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடத்தை வழங்குவேன் என்று சொன்னார். அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. இருந்தாலும் அப்போது அவரிடம் சரியென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என் மனைவி திருமதி.ரூபாராணி பெயரில் உள்ள இலவச வீட்டுமனையிடத்தில் வீடு கட்ட அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடத்தை வழங்க என்னிடம் லஞ்சப்பணம் ரூ.6,000/- கேட்ட கீழராஜகுலராமன் ஊராட்சி மன்ற தலைவர் திரு.காளிமுத்து மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள, (sd), பொன்.பாபா பாண்டியன் 25.06.2023, பொன்.பாபா பாண்டியன் Sir, Received the complaint on 25.06.2023 at 16.00 hrs. The genuiness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.05/2023 u/s 7 of Prevention of Corruption Act 1988 as Amended in 2018 on 25.06.2023 at 18.00 hrs and took up for investigation. (sd) C.Salvanthurai 25.06.2023 C.SALVAN THURAI, Inspector of Police, V&AC, Virudhunagar.

25/6/23

(C.SALVAN THURAI)
Inspector of Police
V&AC
Virudhunagar